# ந. மகேஸ்வரியின் ‘மனைத்தக்க மாண்புடையாள் ஆகி’ சிறுகதையில் பெண்ணியப் பார்வை

# Feminism in Na. Mageswary’s Short Story entitled *Manaithakka Maanpudaiyaal Aagi*


சிவகுமாரி சானியப்பன் / Sivakumari Saniappan[1]

முனைவர் மணிமாறன் சுப்ரமணியம் / Dr. Manimaran Subramaniam[2]

இணைப்பேராசிரியர் முனைவர் நோர்ஹாயத்தி அப்துல் ரஹ்மான் / Prof.Madya Norhayati Ab. Rahman[3]



Date of submission: 2022-05-11
Date of acceptance: 2022-06-20
Date of Publication: 2022-07-28


Corresponding author’s Name:
Dr. Manimaran Subramaniam Email: manimaran23@um.edu.my



## Abstract

The feminist perspective is a new perspective in Tamil literature. A male is given the power while a female is rolled like a dice. There is no denying that the stories of the writer N. Maheshwari are stories that criticise the lives of women. N. Maheshwari is a feminist thinker. Men and women are human beings but do not have the same level of equality. Women are primarily deprived of their rights and suffer from gender discrimination. The rights granted to women are denied. The oppression of men, the tendency to exploit women, and the environment in which women are seen as secondary continue until today. Therefore, the author raises the demand for women to be completely free from the patriarchal environment in the short story entitled *Manaithakka Maanpudaiyaal* Aagi.



**Key Words:** *Woman writer, Women character, Feminism, Author Na.Mageswary, Malaysian short stories*


## முன்னுரை

சிறுகதை என்பது நேரடியாக சமுதாயத்தையும், வாழ்க்கை நிலையையும் ஒட்டியதாகும். சமுதாயத்தில் காணப்பெறும் பண்பாடுகள், கலாச்சாரம், எண்ணங்கள், மக்களின் மனநிலை, வெற்றிகள், தோல்விகள், அனுபவங்கள், போராட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். சிறுகதை, கட்டுரை, கவிதை, புதினம் இவை போன்று எதுவாக இருந்தாலும் அவை சமூகத்தின் மூலதனம் ஆகும். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனிதனுடைய பண்பாடு, கலாச்சாரத்திற்கு ஏற்ப இலக்கியங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனிதன் சிந்திக்க கூடிய சிந்தனைகள் ஒரு படைப்பாளனின்


[1] The author is a Ph.D research scholar in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. sivakumarinive@yahoo.com

[2]The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

[3]The author is a Prof. Madya in the Department of Malay studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. yati@um.edu.my

சிந்தனை நிலையில் தோன்றி இலக்கியமாக உருவாகிறது. ஒவ்வொரு நிலைகளிலும் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன (இராமலிங்கம், 1985, p.34). இந்த மாற்றங்களை படைப்பாளன் கவனத்தில் கொண்டு கவிதை வடிவிலும், கட்டுரை வடிவிலும், சிறுகதை வடிவிலும் வெளிக்கொணர்கிறான். இந்த வகையில் ந.மகேஸ்வரியின் 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி' சிறுகதையில் பெண்ணியப் பார்வை என்ற தலைப்பில் அவர் சமூகத்தின் மீதும், பெண்களின் மீதும் கொண்டுள்ள அக்கறையை சிறிய ஆய்வாக எடுத்துக் கொண்டுள்ளேன்.

ந.மகேஸ்வரியின் சிறுகதைகள் ஆண், பெண் என்ற பாகுபாடு இன்றி மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதில் முக்கியத்துவம் பெற்றிருப்பவர்களை வைத்து எழுதப்பட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகளில் முக்கியமாக சமுதாயத்தை உற்றுநோக்கும்போது பெண்கள் சில கொடுமைகளுக்கும் இயலாதன்மைக்கும் ஆளாகிவிடுகின்றனர். ஆணும் பெண்ணும் சமத்துவம் என்று சொல்லிக் கொள்கிற இக்காலகட்டத்தில் மறைமுகமாக பார்க்கும்போது ஆண், பெண் சமத்துவம் மிக குறைவாகவே காணப்படுகின்றது. இவர் எழுதிய சிறுகதைகளில் சில கதைகள் ஆணை சிறப்பித்து பாராட்டினாலும் பெண்கள் தங்கள் குடும்ப உறவுகளில் சிக்கித் தவிக்கும் அவல நிலையையும் எடுத்துக்காட்டியுள்ளார். பெண்கள் கல்விதகுதி, தொழில் போன்றவற்றில் ஏற்றம் பெற்றிருந்தாலும் சமூக தகுதி என்பது கிணற்றில் போட்ட கல்லாகவே காணப்படுகின்றது. பெண் படைப்பாளிகள் பெண் சமூகத்தின் மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறையையும், ஆதிக்கத்தையும் வஞ்சிக்கப்படுதல் போன்றவற்றையும் தன் படைப்புகளின் மூலம் மிக சுலபமாக எளிமையாக வெளிப்படுத்துகின்றார். வருங்காலங்களில் ஆண் பெண் சமத்துவம் மேலோங்க வேண்டும், பெண்கள் குழந்தைகள் தைரியமாக நடமாட வேண்டும்.

பெண்களுக்கு சமூகத்தில் அந்தஸ்து, மரியாதை பேணப்பட வேண்டும். வாழ்க்கைப் பணிப்பகிர்வு, சமூக தகுதிநிலை பரந்துபட்ட மனநிலை போன்றவை அதிகமாக வேண்டும். பெண்ணின் உழைப்புச் சுரண்டல்கள் குறைய வேண்டும். வளமான சமுதாயம் உருவாக வேண்டும். பெண்கள் மதிக்கப்பட வேண்டும் என்கிற ஏக்கத்தின் வெளிப்பாடாக இவருடைய சிறுகதைகள் அமைந்துள்ளன. பெண்கள் அடிமைத்தனத்தைக் கல்வியாலும், அன்பாலும், பண்பாலும் நீக்கம்பெறச் செய்து, அமைதியும், இல்லறம் நல்லறமாக்கும் திறனும், பொதும மனப்பான்மையும், ஆளுமைத்திறனும், இல்லறம் மற்றும் வெளியுலக செயலில் முடிவெடுத்தலில் தனித்திறனும் தற்போதைய சமுதாயத்தில் பெண்கள் பெற்றுத் திகழ்கின்றனர் என்பதை ந.மகேஸ்வரியின் 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி' சிறுகதை மெய்ப்பிக்கின்றது.

## கட்டுரையின் நோக்கம்

1. பெண்ணே,பெண்ணின் அத்தனை உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திய விதம், இதுவரை ஆண் படைப்பாளர்களே விமர்சித்த, விமர்சிக்கப்பட்ட பெண் இனம், பெண்ணால் முழுமையாக உணர்ந்து விமர்சிக்கப்படுவதை தெளிவாக விளக்குதல்.

2. 'மனைத்தக்க மாண்புடையன் ஆகி' சிறுகதையில் பெண்ணின் நிலை, ஆணாதிக்கம், பெண்ணின் ஆளுமைத் திறன்களான மனவுறுதி, தன்னம்பிக்கை போன்ற உண்மைகளை சான்றுகளுடன் ஆராய்தல்.

## ஆய்வு முன்னோடிகள்

மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் எனும் பிரிவின்கீழ், சிறுகதையின் தோற்றம் வளர்ச்சி, பாடுபொருள், கட்டமைப்பு, உட்கூறுகள், கதாபாத்திரம், பாத்திரப்படைப்பு, மொழி, பெண்ணியம் ஆகிய பகுப்புகளின் அடிப்படையில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் சிறுகதையின் தோற்றம், வளர்ச்சி,

பாடுபொருள், கட்டமைப்பு, உட்கூறுகள் என்பதான ஆய்வுகளில் குணசீலன் (2009), அண்ணாதுரை முருகையா (2007), பாலு சுப்ரமணியம் (2007), கிருஷ்ணன் மணியம் (1989) மலேசியத் சிறுகதையின் வரலாற்றையும், சிறுகதை எழுத்தாளர்களின் எழுத்தாற்றலயும், அவர்களின் படைப்புகளில் வெளிப்படும் சிந்தனையாற்றலையும் ஆய்வுக்கு உட்படுத்துவதாக உள்ளன. சிறுகதைகளில் கதாபாத்திரம், பாத்திரப்படைப்பு பகுப்புகளின் அடிப்படையில் தொடர்பான ஆய்வுகளில் அவளியார் முத்துசாமி (2014), ரவீந்திரன் மாரய்யா (2012), மனோண்மணி தேவி (2008),சிறுகதைகளில் வெளிப்படும் பெண்பால் கதாபாத்திரங்களின் நிலையினை ஆய்வுக்கு உட்படுத்தி விளக்கியுள்ளன. உமாதேவி (2011), இளங்குமரன் (2009) ஆய்வுகள் . சிறுகதைகளில் சமூகத்தில் நடக்கும் சமகால சிக்கல்கள் சார்ந்த ஆழமான பார்வை முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், பிரேமாவதி (2004), புஷ்பநாதன் நாகராஜா (2014), ராஜேஸ்வரி (2015) சிறுகதைகளில் பெண்ணியம் சார்ந்து விரிவான பார்வை முன்வைக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட முன்னோடி ஆய்வுகளின் அடிப்படையில் காணும்போது இலக்கியங்கள் பெண்களை மிகவும் பலவீனம் மிகுந்தவர்களாகவும், சமூக பொருளாதார உண்மைகளை அறியாதவர்களாகவும் காட்டுகின்றன. இதனால் இலக்கியங்களும், கலைகளும், பிறவும் பெண்ணை அறிவிலிகளாக, உணர்ச்சி மாந்தர்களாக, அன்பு, தியாகம் நிறைந்தவர்களாகக் காட்டுவதை மரபாக்கி வந்துள்ளன. இவை ஆணின் தேவையை நிறைவு செய்வதற்காகப் புனையப்பட்டவை எனவும், பெண் ஆணின் பார்வையினூடாக உருவாகிறாள் எனவும், அவளின் பணிப்பகிர்வும் அவனால் தீர்மானிக்கப்படுகிறது என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### பெண்ணியம்

பெண்ணியலார் ஃபெமினிசமி (Feminisme) என்ற பிரென்ஞ்சு சொல்லில் இருந்து ஃபெமினிசம் (Feminism) என்ற ஆங்கிலச் சொல் வந்தது என்பர். கி.பி 1880இல் ஃபெமினிசம் என்கின்ற சொல், பெண்களின் அரசியல் உரிமை பற்றித் தட்டிக் கேட்கவே முதலில் பயன்படுத்தப்பட்டது. கி.பி. 1890 இல் ஃபெமினிசமி என்ற சொல், பிரென்ஞ் சுப் பெண்கள் குழுக்களிடையேயும், அவர்களது வெளியீடுகளிலும் அதிகம் பயன்படுத்தப்பட்டது. ஃபெமினிஸ்டி ((Feministe) என்ற சொல்லைவிட, ஃபெமினைன் (Feminine) என்ற சொல் அதிகம் பயன்படுத்தப்பட்டது. ஃபெமினா (Femina) என்கின்ற இலத்தீன் வேர்ச்சொல் ‘இசம்’ (ism) என்ற அடைச்சொல் சேர்த்து, ஃபெமினிசம் என்று அழைக்கப்பட்டது. (Nancy, 1985, pp.1314).

1890 வரையில் பெண்ணியம் என்பதைக் குறிக்க மகளிரியம் (Womanism) என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது. 1895 ஆம் வருடம் ஏப்ரல் 27 ஆம் நாளன்று வெளியிட்ட அத்தீனா என்ற கிரேக்கப் பெண் தெய்வக் கோயில் என்ற நூலில் ஆலிஸ் ரோசி என்பவர் மேலே குறிப்பிட்ட பெண்ணியம் என்ற சொல்லை மகளிரியம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தினார். பெண்ணியலார், ஃபெமினிசம் என்கின்ற சொல்லுக்கு சோசியலிசம் என்ற சொல்லின் தாக்கமும் ஏற்பட்டிருக்கக் கூடும் என்பர். பெண் சமத்துவம் வேண்டிப் போராடும் பெண்ணியக்கங்களையும், செயல்பாடுகளையும் இச்சொல் குறிக்கும். ஆனால் பெண் விடுதலை, பெண்ணுரிமை போன்ற இயக்கங்களின் அடிப்படை நோக்கங்களின்றும் மேலும் பரந்துபட்ட பொருளில் ஃபெமினிசம் என்கின்ற சொல் கையாளப்படுகின்றது (தேவதத்தா-தி.கமலி, 1992, pp.2627). கி.பி.1907 இல் ஹீபர்டின் அக்லெர்ட் (Hubertine Auclert) என்பவர் வெளியிட்ட கடிதத்தில், ஃபெமினிசம், ஃபெமினிஸ்டி ஆகிய சொற்கள், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே பயன்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1909ல் இங்கிலாந்து பருவ இதழ்கள் வாக்குரிமை (Suffragism) என்பதல்லாமல், ஃபெமினிசம் என்று ஒன்றில்லை என்று வாதாடின. ஃபெமினிசம்

என்ற சொல்லே இறுதியில் வெற்றி பெற்றது. ஃபெமினிசம் என்ற சொல்லை வழக்குரைஞர்கள் அதிகம் பயன்படுத்தினர் *(*Nancy, *1985,* p.*14).*

பெண்ணியம் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் சிறப்பானவை மட்டும் கீழே தரப்பட்டுள்ளன. பெண்ணியமானது பெண்களைப் பற்றிய பலவிதமான குறிக்கோள்களைக் கொண்டதாகும் (Juliet Mitchell & Ann Oakley, 1986, p.25).

- i. பெண்ணியம் பெண்களின் நிலையை மாற்றக் கூடிய மிகச் சிறந்த ஒரு சமூக இயக்கமாகும்.
- ii. பெண்ணியம் அரசியல் உணர்வுகளின் சார்பு உடையது.
- iii. பெண்ணியம் ஒரு தன்னாட்சி உரிமையுடைய பெண்களைப் பற்றி, பெண்களே தங்களுடைய சொந்த வாயால் பேசக்கூடிய ஒன்று.
- iv. பெண்ணியத்தின் மெய்யான உணர்வு வெளிப்படுவது எப்போதெனில், பெண் ஆணிலிருந்து விலக்கப்பட்டுத் தனிக் கண்ணோட்டத்தில் பார்க்கப்படும் போதுதான்.

மேற்கண்டவற்றிலிருந்து பெண்ணியம் என்பது காலந்தோறும் சமுதாயத்தில் பெண்கள் இருந்து வந்துள்ள முறைகளையும், பெண்களுக்குரிய உரிமையை மீட்டெடுக்கும் ஒரு இயக்க ரீதியான வரலாற்றினையும் வெளிப்படுத்த வல்லது என்பதையும் உணர முடிகிறது. மேலும் பெண்ணியம் என்பதன் பொருள் காலத்திற்கேற்ப மாற்றம் அடையக் கூடியது. பெண்ணியம் வரலாற்றுக் கலாசார நடைமுறைகளிலும், செயல்பாட்டுத் தன்மைகளிலும் பங்கு பெற்றிருப்பதினால் பெண்ணியத்தின் வரையறையானது மாற்றம் அடையக் கூடிய வாய்ப்பு உடையது. *1914* இல் வெளியான நூற்றாண்டு பருவ இதழ்ச் சுவடி, பெண்ணியம் குறித்து விளக்கியவற்றை, நான்ஸி எப்காட், தி கிரவுண்டிங் ஆப் மார்டன் ஃபெமினிசம் *(*The Grounding of Modern Feminism*)* என்ற நூலில் பின்வருமாறு சுட்டுகின்றார்.

> "பெண்ணியத்தின் கரு பெண்களின் இரத்தத்திலுள்ளது இதன் கொள்கை நமது இனத்தின் இதயத்திலுள்ளது. இதன் வார்த்தை நமது தினசரி நாளிதழின் பக்கங்களில் உள்ளது."

இவ்வாறு பெண்ணியத்தின் பொருள் காலத்திற்கேற்ப மாறும் தன்மை உடையதால், பெண்ணியம் தொடர்ந்து ஆராயத்தக்கதாகும் (Juliet Mitchell & Ann Oakley, 1986, p.26).

## பெண்ணியத்தின் நோக்கம்

நமது கலாச்சாரச் செயல்பாடுகள் அனைத்திலும் பெண் இரண்டாந்தர இடம் பெற்றிருக்கிறாள். ஆணுக்கு அடிமையாக இருக்கிறாள் என்பது பெண்ணியக் கொள்கையின் அடிப்படையான கருத்து. பெண்களின் ஒடுக்கு முறையை இல்லாமல் ஆக்குவதும், ஆண்களின் பார்வையில் கட்டப்பட்டுள்ள இன்றைய கலாச்சாரத்தை அதாவது ஆணாதிக்க முறையை இல்லாமல் போக்கி, பெண்களின் விழைவுகள், நோக்கங்கள் ஆகியவற்றை முழுமையாக ஏற்கும் ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவது பெண்ணியத்தின் நோக்கம். பெண்ணியல்பு என்று சொல்லி அவளை அடிமைப்படுத்திய ஆண் ஆதிக்கச் சமுதாயத்திலிருந்து பெண்ணை விடுவித்து அவளுக்கு நல்ல எதிர்காலத்தைப் பெற்றுத்தரும் முயற்சியே பெண்ணியம் அல்லது பெண்ணிலை வாதம் ஆகும். ஆகவே பெண்மை என்பது பெண்களின் இயல்புகளையும், பெண்ணியம் என்பது பெண்களின் மறுக்கப்பட்ட உரிமைகளுக்காகப் போராடுவதையும் குறிக்கும் (ஜெயசீலி, *2004,* p.*26).*

பெண்ணியத்தின் நோக்கமானது, பெண்களின் அனைத்துத் திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்; அடக்கப்படக் கூடாது; பெண்களின் மனம், உடல் அனைத்தும் செயல்திறனை நோக்கி முன்னேற வேண்டும் என்பதாகும். இதனை நான்ஸி எப்காட் விளக்கும் கீழ்க்காணும் கூற்று அரண்

சேர்ப்பதாக அமையும்.

பெண்கள் அனைத்து வகையான செயற்பாட்டு உணர்வு, பொருளாதார சுதந்திரம், அமைப்பு மற்றும் மனரீதியான அனைத்து ஊனங்களையும் நீக்குவது. இருதரப்பட்ட பாலியல் நீதிக்கு முடிவு வேண்டுமெனில் மாறாத பாலியல் நீதியிலிருந்து நீங்கி தொழில் மற்றும் திறமைகளை வெளியிடும் வண்ணம் பெண்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி ஒளி பெறச் செய்வது . "இன்றைய நிலையில் பெண்ணியம் என்பது பெண்களின் சமத்துவம், மதிப்பு, வீட்டின் உள்ளேயும் வெளியேயும் தம் வாழ்க்கையையும் வாழ்க்கைக்கான பொருளையும் தேர்வு செய்யும் சுதந்திரம் ஆகியவற்றைப் பெறுவதற்கான சாதனைப் போராட்டமாகும்" (Nancy, 1985, p.15).

### பெண்ணிய சிந்தனைகள்

இந்தியாவில் பெண்களின் உரிமைக்கானப் போராட்டங்கள், பெண்ணின் தனித்துவத்துக்கான அங்கீகாரம் ஆகியவை சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புபடுத்தியே காணவேண்டும். ஏனெனில் அடிமைநிலை என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமான பொதுநிலை. இதில் ஆணின் ஆதிக்கத்திலிருந்து பெண்ணுக்குமான அடிமைநிலை, உணர்வுகளையும், செயல் வெளிப்பாட்டிலும் கட்டுப்பாடுகள் ஆகியவை பெண்ணின் அடிமை உணர்வுகளாக அடையாளப்படுத்தப் பெற்றன. சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக பெண்களின் உணர்வுகள் மதிக்கப்பெறவேண்டும், பெண்ணின் கல்வியில் தடையிருக்கக்கூடாது. பெண்ணுக்கான சொத்துரிமை, பெண்ணின் அறிவுசார் சொத்துக்கு அங்கீகாரம் ஆகியவைப் பற்றி ஆண், பெண் என்னும் வேறுபாடின்றி பெண்ணின் மனவியலைப் புரிந்து கருத்து வெளிப்பாடுகள், செயல் வடிவங்கள் இயவை வரலாற்றில் பதிந்துள்ளன. (ஜாஸ்மின் பிரியா, 2018, p.222).

பெண் இல்லையென்றால் மானிட வாழ்வு உயிரற்றதாகக் கருதப்படும். பெண் இல்லாத மனித வாழ்க்கை 'மாலி இல்லாத மரக்கலம்' போன்றது. சமுதாயத்தின் சரிபாதி அங்கமாக பெண்கள் காலங்காலமாகச் சமுதாயத் தாக்குதலுக்கு ஆட்பட்டு உரிமை இழந்து வந்திருக்கிறார்கள். அதனால்தான், பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் அனைவரும் பெண் விடுதலையைப் பற்றிச் சிந்தித்தனர். ஆணுக்கு இணையாக அனைத்து நிலைகளிலும் பெண் இருக்க வேண்டும் என்ற தேவையை இவர்கள் தம் கவிதை வாயிலாக எடுத்துக் கூறி வந்துள்ளனர். பெண்களைப் பற்றி, பெர்னாட்சா கூறியதாகப் பாரதிதாசன்,

*"கல்வியில் உரிமையில்லை பெண்களுக்குக்*

*கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்!*

*புல்லென்ற நினைக்கின்றீர் மனைவிமாரைப்*

*புருஷர்களின் உபயோகம் பெரிதென் கின்றீர்!*

*வல்லவன்பேர றிஞன் வார்த்தைக் கேட்டீர்*

*மனோபாவம் இனியேனும் திருந்தவேண்டும்"*

(பாரதிதாசன் கவிதைகள், 1982, p.105)

என்று கூறுவதால் பெண் இனத்தின் நிலையைப் பற்றி அவர் கொண்ட கவலையை உணரமுடிகின்றது.

பெண்ணியம் பற்றியும் பெண்களுடைய தகுதிநிலை குறித்தும் ஆராய்வதற்கு பெண்ணியத்தைப் பற்றி எழுதிய படைப்பாளர்களின் இலக்கியங்கள் பெரிதும் உதவியாக இருக்கிறது. தமிழ் இலக்கியத்தில், பெண்ணியத் திறனாய்வு பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை முன்வைப்பதன் மூலம் பெண்ணியத்தின் புரிதலும், தேவையும் அறிந்துக் கொள்ள இயலும். சமூகத்தில் பெண்கள் வசிக்கும் பண்பாட்டு தளங்களில் பெண்களின் வாழ்வை அறிந்துக் கொள்ளவும், அவர்கள் மீதான எதிர்மறையையும், எதிர்மறையான எண்ணங்களை அறிந்து கொள்ளவும் பெண்ணியம் உதவுகிறது. (ஜாஸ்மின் பிரியா,

*2018,* p.*224)*

பெண்ணியம் என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான நேர்மையான சமத்துவம் உள்ள சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகுமுறையாகும். மேலும், அனைத்துத் தளங்களிலும், சூழல்களிலும் பெண்களுக்கான ஒடுக்குமுறைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகள் முன்வைக்கக்கூடிய கோட்பாடாகவும், கொள்கையாகவும், சிந்தனையாகவும், இயக்கமாகவும் வளர்ந்துள்ளது எனலாம் *(ஜாஸ்மின் பிரியா, 2018,* p.*226)*

## 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி' சிறுகதையில் காட்டும் பெண்

ஆசிரியர் ந. மகேஸ்வரியின் சிறுகதைகள் வாழ்க்கையை குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை விமர்சிக்கும் கதைகள் என்பதை மறுக்கவியலாது. இவரின் 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி' சிறுகதையில் காணப்படும் பெண்ணான சத்தியவதி ஆண் ஆதிக்கத்தை எதிர்நோக்குபவளாக, சிக்கல்களை எதிர்நோக்குவதில் மனவுறுதி மிக்கவளாக, தோல்விகளால் துவளாத விடாமுயற்சி கொண்டவளாக, தன்னம்பிக்கையுடன் செயலாற்றுபவளாக படைக்கப்பட்டுள்ளாள்.

## பெண்கள் நிலை

சமுதாயம் எவ்வளவோ முன்னேறிக் கொண்டிருந்தாலும் ஒரு பக்கம் பெண்கள் அழுத்தப்பட்டுக் கொண்டே வருகிறார்கள். பெண்களுக்கு பிரச்சினைகள் இல்லாத இடமே இல்லை எனலாம். மனிதப்பிறவி கொண்ட ஆணும், பெண்ணும் சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர் அல்லர் என்ற கருத்து இருந்தாலும் அது நடைமுறையில் இல்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். ஆண்களை நம்பி ஆண்களின் சொத்தில் வாழாமல் தாங்களே தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய வகையில் பெண்கள் எடுக்கும் முயற்சியிலும் அவர்களுக்கு பிரச்சனைகளே முதலில் நிற்கின்றன *(ஜெயசீலி, 2004, ஜீ.32).* படிக்கும் பொழுதும் அவர்கள் பெரும் போராட்டங்களையே சந்திக்க நேரிடுகிறது. படித்து ஒரு நல்ல பணியில் அமர்ந்து, திருமண செய்தப் பிறகும் இல்லற வாழ்க்கையில் பணிபுரியும் பெண்களின் அவல நிலைகளை ஆசிரியர் ந. மகேஸ்வரி தன் கதையில் உயிரோட்டமாக கூறியிருக்கும் பாங்கு மிகவும் பாராட்டுக்குரியது. இதனை,

> தன்னிடம் பறித்துக் கொண்டுபோகும் பணம் பெரிய பெரிய பார்களில், கிளப்புகளில் போத்தல்கள் மீது வீசப்படுவதை அறிந்தபோது அவள் விழித்துக் கொண்டாள். வாய் திறந்து ஏதாவது சொல்லி விட்டால் போதும், "அதிகம் படித்து விட்ட கர்வமா...? சம்பாதிக்கிற திமிரா...? இந்த வார்த்தைகளாலேயே அவளைச் சுட்டெரிப்பான் *(2003,* p.1*1).*

மனைவி, குழந்தைகளை காப்பாற்றுவது ஒரு கணவனின் முக்கிய கடமையாகும். அக்கடமையிலிருந்து விலகி, தன் செலவிற்கும் மனைவியின் ஊதியத்தையே களவாடி, சுயமனமகிழ்வுக்கு செலவழிப்பதோடு அல்லாமல்'ஆண் என்றதிமிர்',கேள்வி கேட்கும் மனைவி என்பவளை தகாத வார்த்தைகளால் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அவளை அடிமைப்படுத்த எண்ணுகிறது. ஆனால் பெண்கள் இந்த அடிமைத்தனத்திலிருந்து விழித்தெழ வேண்டும் என்று சத்தியவதியின் வழி பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார் ஆசிரியர்.

வேலையில்லாத கணவன், மனைவியின் வருமானத்தில் தன் சுயநலத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அவனின் செயலை குறித்து கேள்வி வினவிய மனைவியை ஆண் ஆதிக்கம் என்ற 'திமிர்' அவளை கொச்சை வார்த்தகளால் இழிவுப்படுத்துவது நம் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளே இன்றும் நிலவுகிறது என்பதனை ந. மகேஸ்வரி சமுதாயத்தில் இல்லற வாழ்க்கை என்ற கொடுமைக்கூண்டுக்குள் அவதியுறும் பெண்களின் அவலநிலைகளை

படம் பிடித்துக் காட்டுகின்றார். சமுதாய கண்களுக்கு இல்லற வாழ்க்கை என்னும் சிறைக்குள் அடைந்து கிடக்கும் பெண்கள் மனதிற்குள் மட்டும் குமுறாமல், தெளிவான முடிவெடுக்க வேண்டும் என்று ஆசிரியர் பெண்களுக்கு வழிக்காட்டி எழ வைக்கிறார்.

மனைவி மக்களை காப்பாற்றும் தன் கடமையை மறந்து, சுயநலதிற்காக வாழும் கணவன், மனைவியை வார்த்தைகளால் கொடுமைப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளும் சமுதாயம், வழி தவறி போகும் கணவனை மனைவி கேள்வி கேட்டால் இச்சமுதாயம் அவளுக்கு கொடுக்கும் பட்டம் ' படித்த திமிரில் பேசுகிறாள்'. இதனை,

> வேலை கிடைக்கும் வரை சொந்த செலவுக்கு பிள்ளைகளின் காதில்
>
> கழுத்தில் உள்ளதையெல்லாம் ஒவ்வொன்றாய் கழட்டிக் கொண்டு
>
> போவான்.
>
> தட்டிக் கேட்கவோ தடுக்கவோ முடியாது.
>
> அவள் தடுக்க ஆரம்பித்த போதுதான் வேண்டாதவளாகிப் போனாள். "படித்த பெண்ணைக் கட்டிக் கொண்டாலே இப்படித்தான் பெரிய கேள்வியெல்லாம் கேட்பாள்! புருஷனையே மதிக்கமாட்டாள்..." *(2003,p.11)*

சமூகத்தில் பெண்களின் அவலநிலையை எடுத்துணர்த்தி, அதற்கான விமோச்சனத்தை சத்தியவதியின் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

## ஆண் ஆதிக்கத்தை எதிர்த்தல்

ஆணாதிக்கம் நிறைந்த சமுதாயம் பொருளை ஈட்ட வெளியே சென்றாலும் பெண்கள் வீட்டிலிருப்பதையும், வீட்டு வேலைகளில் ஈடுபடுவதையுமே நியதியாக்கி கொண்டுள்ளது. எனவே, பெண்களின் உழைப்பு என்பது ஆணாதிக்கத்தை சார்ந்ததாக உள்ளது. ஆன் ஒக்கலே *(கிஸீஸீ ளிணீளீறீமீஹ், 1986, ஜீ.29)* என்பார், குடும்பத்தில் பெண் வீட்டுப்பணி செய்தல் என்பது இயற்கையானது உலகளாவியது. தேவையானது என்று கூறுகிறார். அதை விளக்க அவர் மூன்று கருத்துக்களை முன்வைக்கிறார்.

i. உயிரியல் அடிப்படையில் ஆண் வேட்டையாடச் செல்லுதல், பெண் வீட்டில் பணிபுரிதல்

ii. மானுடவியலடிப்படையில், ஆண் மிகவும் பலம் வாய்ந்தவன். கருத்தரிக்கும் போதும், குழந்தையைப் பாதுகாக்கும் போதும் பெண் பலம் குறைந்தவளாக இருக்கிறாள். பெண் வீட்டில் பணி செய்வதற்கும், ஆண் வெளியில் வேலை செய்வதற்கும் பாலினத் தொன்மம் *(ஷிமீஜ் விஹ்□லீ)* காரணம் எனக் கூறுகிறார்.

iii. சமூகவியலடிப்படையில் பணிவேறுபாடு பாலினம் சார்ந்தது. குடும்பத்திற்குத் தேவையானது. திருமணத்திற்கு பின்பு வாழ்க்கையை தேட வேண்டியிருக்கிறது.. இன்றைக்குள்ள அவசர காலக்கட்டத்தில் அவசர கதியாகவே அனைவரும் ஓடுகின்றனர். குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து விடுகிறது. இதில் ஆண்களுக்கு குடும்ப பொறுப்பு மிக உறைவாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வீட்டிற்கு வருவதில் தாமதம். நண்பர்களுடன் சுற்றுவது போன்றவை அதிகமாக காணப்படுகிறது. ஆனால் பெண்களுக்கு வீட்டிலும், வேலைப் பார்க்கும் இடங்களிலும் பணிச்சுமை அதிகமாக உள்ளது. இதனால் உளவியல் ரீதியாக பெண் பாதிப்படைகிறாள். திருமணத்திற்கு பின்பு ஆண்கள் எப்படி இருக்கின்றனர் அவர்களுடைய உண்மையான உருவம் என்ன என்பதையும் உளவியல் ரீதியாக பெண் பாதிப்படைவது பற்றியும் மகேஸ்வரியின் 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி' சிறுகதை

வெளிப்படுத்துகிறது.

மனைவியும் தன்னைப் போல உணர்ச்சியுள்ள ஒரு மனிதப் பிறவிதானே என்ற எண்ணமே ஆண் சமுதாயத்திற்கு இருப்பதில்லை. மனைவியின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொள்வதில் ஏதேச்சைப் போக்கினையே ஆண் வர்க்கத்தினர் கடைப்பிடிக்கின்றனர். தன்னுடைய இயலாமையைக்கூட ஏற்றுக் கொள்ளாமல் அதைக் கூட மனைவி மேல் காட்டும் கோப உணர்வாகவே ஆண் ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்பதனை ஆசிரியர் இக்கதையில் வெளிப்படுத்துகிறார். இதனை,

> ‘இயந்திரம் போல அவள் தனது வேலைகளைச் செய்துக் கொண்டுதான் இருந்தாள். எப்படித்தான் அவளால் முடிகிறதோ? இரவு உணவுக்குப் பிறகும் கூட அவளுக்கு வேலை இருந்தது. அடுத்தநாள் காலையில் சமையலுக்குத் தயார் படுத்திக் கொண்டு பிள்ளைகள் படிக்கிறார்களா என்று கவனித்துவிட்டு பாடங்களில் உதவிசெய்து தனது வேலைகளையும் கவனித்துக் கொண்டு... பாவமாகத்தான் இருந்தது. ஆனாலும் சம்பாதிக்க இயலாத தனது நிலையோடு, கை நிறையக் கொண்டு வரும் அவளை ஒப்பிடும்போது தனது கையாலாகாத தன்மைக்கு அவள் மீது ஆத்திரம் பீரீட்டது’
>
> *(2003, p.9)*

என்ற வரிகளின் வழி தெளிவுப்படுத்துகின்றார்.

சத்தியவதியின் கணவன், மனைவி என்பவளை ஒரு பொருளாகத்தான் பார்க்கிறானே ஒழிய அவளும் தன்னுடைய சக உயிரி என்று பார்க்கத் தவறுகிறான். ஆனால் சத்தியவதியோ, தன்னுடைய கணவனுடைய உணர்வுகளை மதிப்பதுடன் அவனைவிட்டு விலகாதிருக்க வேண்டும் என்று உணர்த்தப்படுகின்றாள். இக்கதையில் சத்தியவதியின் கணவனின் ‘சம்பாதிக்க இயலாத தனது நிலை’ என்று வரி ஓர் ஆண் ஆணாதிக்கத்தை வெளிப்படுத்தும் காரணத்தை ஆசிரியர் அழகாக படம்பிடித்துக் காட்டியுள்ளார். தங்களுடைய இயலாமை மற்றவர்களுக்கு தெரிந்தால் அவமானச் செயல் என்று நினைக்கும் ஆண்வர்க்கம், தங்களிடம் உள்ள இயலாமையை மூடிமறைப்பதற்கு தங்களின் அதிகார உணர்வினை பெண்களிடம் வெளிப்படுத்துகின்றனர். ஆக, சத்தியவதி கணவனின் வாயிலாக, ஆசிரியர் இன்றைய சமுதாயத்தில் தங்களின் இயலாமையை மறைப்பதற்கு தன் மனைவியை துன்புறுத்தும் ஆண்களின் ஆணாதிக்கச் செயலினை வெளிப்படுத்தி பெண்களுக்கு சத்தியவதியின் வழி விழிப்புணர்வூட்டுகிறார். ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களுக்கென்று தனிமதிப்போ, சம உரிமையையோ கொடுக்க மறுக்கும் ஆண்களின் மனநிலையை சிறுகதை வெளிப்படுத்துகிறது.

### சிக்கல்களை எதிர்நோக்குவதில் மனவுறுதி

ஆசிரியர் ந. மகேஸ்வரி பெண்கள் வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படும் பொழுது தயங்காத மன உறுதி கொண்டவர்ளாக திகழ வேண்டும் என்பதனை சத்தியவதி கதாபாத்திரத்தின் வாயிலாக அழகாக வெளிப்படுத்தியுள்ளார். சத்தியவதி ஒரு பட்டதாரி ஆசிரியை. அவளின் கணவனோ அவளைவிட கல்வி தகுதியில் குறைந்தவன். உறவு விட்டுப் போகக்கூடாது என்ற காரணத்திற்காக சத்தியவதியின் தந்தை இவளின் விருப்பம் இல்லாமலேயே திருமணத்தை முடித்தார். திருமணமான மறு ஆண்டே சொந்த வியாபாரம் தோல்வி கண்டது. சத்தியவதியிடம் உண்மையைக் கூறாமல் அவளின் சொத்து, நகை, மாத வருமானம் அனைத்தையும் புது வியாபாரத்திற்கு மூலதனமாக போடுவதாகக் பொய் கூறி குடி பழக்கத்திற்கு அடிமையானன். உண்மையறிந்த சத்தியவதி கணவனின் ஏமாற்றுத்தனத்திலிருந்து தன்னையும் தன் பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ள மவுறுதியுடன் முடிவெடுத்தாள். இதனை,

“தன்னிடம் பறித்துக் கொண்டுபோகும் பணம் பெரிய பெரிய பார்களில், கிளப்புகளில்

போத்தல்கள் மீது வீசப்படுவதை அறிந்தபோது அவள் விழித்துக் கொண்டாள்". (2003, ஜீ.11)

தன் பிள்ளைகளுக்கான அனைத்து தேவைகளையும், முழு குடும்ப பொறுப்பினையும் தனியாளாகவே சமாளித்தாள். இந்நிகழ்ச்சியின் வாயிலாக தன் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தேவையான உதவிகளை செய்யாமல், தன் தேவையை மட்டும் பெரிதென மதிக்கும் ஆண்களின் கீழ்தரமான எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

## தன்னம்பிக்கை உடையவள்

படித்த பெண் தன்னம்பிக்கை உடையவளாக இருப்பாள். தனக்குக் கிடைக்கும் தகவல்களைப் பகுத்துப் பார்த்து, சொந்தமாக முடிவு எடுப்பாள் சுயமதிப்பும் ஆற்றலும் உடையவளாக இருப்பாள் என்பது ந. மகேஸ்வரியின் கருத்து. "தனது ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் தன்னுடைய எதிர்காலத்தைத் தானே வடிவமைத்துக் கொள்ளுவதற்குரிய உரிமையும், பெண்ஆண் யாராக இருப்பினும் தனி நபர் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் என்றும் 'தனிமனிதப் பெண்ணியம்' கூறுகிறது (முத்துச் சிதம்பரம், 1995, p.33). இக்கூற்றினை ந. மகேஸ்வரி தன்னுடைய எதிர்காலத்தை தானே வடிவமைத்து கொள்ளுவதற்குரிய உரிமையை சத்தியவதியின் வாயிலாக வெளிக்கொணர்கிறார். இதனை,

சத்தியவதி தீர்க்கமானதோர் முடிவுக்கு வந்து விட்டாள். "அவருக்கு வேலை தேடித் தருவதை விட எனக்கு வேறு ஓர் இடத்திற்கு மாற்றல் வாங்கிக் கொடுத்தால் நல்லது என்று நினைக்கிறேன்" (2003, p.12)

சத்தியவதியின் வேலை மாற்றம் கடிதத்தைக் கண்டவுடன் அவளின் கணவன் திடுக்கிட்டுப் போனான். தன் கணவனை திருத்த வேண்டும் என்ற காரணத்திற்காகவும், தன் மூன்று பெண்பிள்ளைகளின் எதிர்கால கல்வி நலனுக்காகவும் சுயமாக முடிவெடுத்து அதில் வெற்றியும் கண்டதை ஆசிரியர் தனிமனிதப் பெண்ணியத்தை தன் படைப்பில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

## முடிவுரை

காலம் காலமாகப் பெண்ணை அடக்கிய சமுதாயத்தை எதிர்த்து பெண்ணைத் துணிச்சல் வாய்ந்தவளாகவும் தன்னிச்சையாக முடிவு எடுக்கக் கூடியவளாகவும் ந. மகேஸ்வரி சித்தரித்துள்ளார். ஆண் ஆதிக்கத்தை எதிர்த்து பெண்கள் தங்கள் எண்ணங்களையும் உரிமைகளையும் நிலைநாட்டப் போராடி வெற்றி கண்டுள்ளனர். இச்சிறுகதையில், சொல்லப்பட்ட சத்தியவதி, முதலில் தன் கணவனுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்து பின்னரே ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல்கொடுத்துத் தாம் விரும்பிய வாழ்வை மேற்கொண்டுள்ளாள். ஆணின் கட்டுப்பாட்டிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு ஒரு பெண் கணவன் குழந்தைகளோடு புது வாழ்வு வாழ விரும்புவதை ஆசிரியர் இச்சிறுகதையின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளார். பெண் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற போலித்தனத்தைத் தகர்க்கின்றது இச்சிறுகதை. சத்தியவதியின் வேலை மாற்றலின் முடிவு, அவளின் வாழ்க்கைக்கு புது விடியலின் தொடக்கமாக ஆசிரியர் கையாண்டுள்ள பாங்கு பாராட்டுக்குரியதாகும். பெண்கள் அடிமைத்தனத்தைக் கல்வியாலும், அன்பாலும், பண்பாலும் நீக்கம்பெறச் செய்து, அமைதியும், இல்லறம் நல்லறமாக்கும் திறனும், பொதுமை மனப்பான்மையும், ஆளுமைத்திறனும், முடிவெடுத்தலில் தனித்திறனும் தற்போதைய சமுதாயத்தில் பெண்கள் பெற்றுத் திகழ்கின்றனர் என்பதை ந. மகேஸ்வரியின் 'மனைத்தக்க மாண்புடையாள் ஆகி" சிறுகதை மெய்ப்பிக்கின்றது. வாழ்வியலோடு இணைந்து பெண்களுக்கு தேவையான அடிப்படைக் கருத்துகளையும் இவரின் சிறுகதை எடுத்து கூறுகின்றது.

## References

Athyletchumy. (2008). *Athyletchumy sirukathaikal*. Kuala Lumpur: Neptune Press.

Athyletchumy. (2011). *Malaysia pen ezhuththalarkal ezhuvarin ezhuchchimiku sirukathaikal*. Chennai: Manimegalai Publications.

Athyletchumy. (2015). *Malaysia pen ezhuththalarkalin ezhuchchimiku sirukathaikal*. (2nd ed.). Kuala Lumpur: Uma Pattipagam.

Cott, F.Nancy. (1985). *The Grounding of Modern Feminism.* London: Yale University Press, London.

Ellen, M. (1976). *Literary Women: The Great Writers*. New York: Oxford University Press.

Ellman, M. (1968). Thinking About Women. Dalam Eagleton, M. (Eds.), *Feminist Literary Theory: A Reader*. Massachusetts.

Juliet Mitchell & Ann Oakley. (1986). *What is Feminism*. Basil Blackwell, oxford

Jeyaseely, K. (2004). *Thilagavathiyin Puthinanggalil Penniyam*. Chennai: Thi Barkkar.

Kalyana Sundaram, V. (1998). *Pennin Perumai & Valkai Thunai*. Chennai: Poombugar Publications.

Mageswary, N. (1985). *Taaimaikku Oru Thavam*. Klang: Tamil Ilakkiya Kalakam.

Mageswary, N. (2003). *Mageswaryin Cirukathaikal*. Klang: Malaysia Tamil Panpattu Iyakkam.

Mageswary, N. (2010). *Ninaivugalai Cumanthapadhi*. Kuala Lumpur: Visal Print Service.

Mageswary, N. (2005). *Anamaiyak Kaala Malaysia Tamil Sirikathaikalin Valarchiyum Pokkum*. Klang: Malaysia Tamil Panpatthu Iyakkam.

Mageswary, N. (2010). *Ninaivugalai Sumanthappadi*. Klang: Visal Print Service.

Muthu Sithambaram. (1995). *Penniyam – Thoorramum Valarchiyum.* Chennai: Tamil Puttakalayam.

Pakkiyam, K. (2013). *Malaysia Tamil IIakkiyathil Pen IIakkiya Vaathigal.* Kuala Lumpur: Uma Publication.

Pakkiyam, K. (2013). *Malaysia Tamil Ilakkiyathil Pen Ilakkiyavaathikal*. Kuala Lumpur: Uma Publications.

Priya, Jasmine. (2018). *Ikkaala ilakkiyanggalil camuthaaya cinthanaikal*. Coimbatore: Department of Tamil Avinashilingam Institute for Home Science and Higher Education for Woman.

Ramalinggam, M. (1985). *Irupathaam Nurrandu Tamil Ilakkiyam.* Chennai: Tamil Puttakalayam.

Showalter, E. (1977). *A Literature of Their Own: British Women Novelists from Bronte to Lessing*. Princeton: University of Princeton Press.

Showalter, E. (1982). Feminist Criticism in the Wilderness. Dalam Abel. Elizabeth (ed.). *Writing and Sexual Difference* (pp. 9-36). Chicago: University of Chicago Press.

Showalter, E. (ed.). (1985). *The new feminist criticism*. London: Virago Press.

Showalter, E. (1987). Towards a Feminist Poetics. Dalam Rylance, Rick (ed.). Debating Texts: *A Reader in Twentieth-Century Literary Theory and Methode* (pp. 234-247). Milton Keynes: Open University Press.

Showalter, E. (1990). Feminism and Literature. Dalam Collier dan Geyer-Ryan, (ed.). *Literary Theory Today* (pp. 179-202). New York: Cornell University Press

Thevathatta. (1991). *Penniyam oru varalaarrup paarvai*. Chennai: Manimegalai Publications.

Thevathatta, thi.kamalzi. (1992). *Penniyak Kalaichol Vilakkak Kaiyeedu*. Chennai: University Annai Theresa Publications.

Uma Sarasuwathy, K.M. (1998). *Balakumaaran Navalkalil Penniyam*. Thirunelveeli: University Manonmaniam Suntharanaar.